## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

## E.A.01/2025 IN E.P. 30/2024 IN O.S. 290/1993

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 03–ஆம் நாள் புதன் கிழமை **ம.சா.2.** (1969–ஆம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி. ம.விஜயா, மூன்றாம் நிலை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரபாகரன் | வயது | : 34 |
| த/பெ | : செல்லன் | தொழில் | : கிராம நிர்வாக அலுவலர், ஆத்துக்குறிச்சி |
| கிராமம் | : கோணமடுவு | மாவட்டம் | : சேலம் |
| வட்டம் | : | | |

---

<u>ம.சா. 2–ன் முதல் விசாரணை</u>

நான் தற்போது ஆத்துக்குறிச்சியில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பெரிய கருக்கை கிராமம். அ.பு.சர்வே எண்.349/8 எனது அதிகாரத்திற்கு உட்பட்ட ஆத்துக்குறிச்சி கிராமத்தில் உள்ளது. மேற்படி சர்வே எண் சொத்தைப் பற்றிய விபரம் எனக்கு தெரியும். சர்வே எண்.349/8 இடத்தை நான் கள ஆய்வு செய்துள்ளேன். சர்வே எண்.349/8 ன் கூடுதல் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 0.09.5 ஏர்ஸ் ஆகும். அது செண்ட் கணக்கில் 23.43 செண்ட் ஆகும். சர்வே எண்.349/8 எத்தனை உட்பிரிவுகளாக உள்ளது என்றால் 3 உட்பிரிவுகளாக உள்ளது, அவை சர்வே எண்.349/8A, 349/8B, 349/8C ஆகும். மேற்படி சர்வே எண் உட்பிரிவுகளின் அளவுகள் மற்றும் அவற்றின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் சர்வே எண்.349/8A ல் கோவிந்தசாமியின் மகன் ஆறுமுகம் பெயரில் பட்டா எண்.1759 ல் 0.01.50 ஏர்ஸ் உள்ளது, சர்வே எண்.349/8B ல் பெருமாள் மகன் ராமலிங்கம் பெயரில் பட்டா எண்.185 ல் 0.01.0 ஏர்ஸ் உள்ளது, சர்வே எண்.349/8C விஸ்தீரனம் 0.07.0 ஏர்ஸ் ஆகும், அதன் பட்டா 9 நபர்கள் பெயரில் பட்டா எண்.4861 கூட்டாக உள்ளது, அந்த 9 நபர்களின் பெயர்கள் 1) வேலாயுதம் மகன் கலியமூர்த்தி, 2) பெருமாள் மகன் ராமலிங்கம், 3) பழனி மகன் சக்கரவர்த்தி, 4) வேலாயுதம் மகன் கணேசன், 5) தங்கராசு மகன் சிவபிரகாசம், 6) கோவிந்தசாமி மகன் ராமசாமி, 7) சின்னத்தம்பி மகன் தர்மராசு, 8) சின்னமணி மகன் மகேந்திரன், 9) ராமலிங்கம் மகன் ராமசந்திரன் ஆகும்.

2) அ.பு.சர்வே எண்.349/8B ல் பட்டாதாரரான பெருமாள் மகன் ராமலிங்கமும், சர்வே எண்.349/8C ல் கூட்டுப்பட்டாதாரரான பெருமாள் மகன் ராமலிங்கமும் ஒரே நபர் தான். பெருமாள் மகன் ராமலிங்கத்தின் நிலத்தில் என்ன உள்ளது என்றால் சர்வே எண்.349/8B, 349/8C இரண்டிலும் சேர்த்தார் போல் அவரது வீடு உள்ளது.

சர்வே எண்.349/8 A பட்டா கோவிந்தசாமி மகன் ஆறுமுகம் பெயரில் உள்ளது, ஆறுமுகம் இறந்துவிட்டார் தற்போது அவரது மகன் ராஜதுரை என்பவரின் சீட்டு வீடு சர்வே எண்.349/8A ல் உள்ளது, அதன் தென்புற சுவர் சர்வே எண்.349/8B ல் உள்ளது. சர்வே எண்.349/8B ன் விஸ்தீரனம் புலவரைபடம் படி என்ன என்றால் 128 சதுரமீட்டர், செண்ட் கணக்கில் 3.16 செண்ட் ஆகும். சர்வே எண்.349/8B, 349/8C ஆகியவற்றை அளந்து பார்த்தால் தற்போது பெருமாள் மகன் ராமலிங்கம் என்பவரின் அனுபவத்தில் உள்ள சொத்தின் விஸ்தீரனம் அறியலாம். சர்வே எண்.349/8C யில் உள்ள ராமலிங்கம் வீட்டிற்கு தென்புறம் யார் வீடு உள்ளது என்றால் தெற்கில் மேல்புறம் கலியமூர்த்தி மகன் பாலமுருகன் என்பவரின் வீடு உள்ளது, தெற்கில் கீழ்புறம் முன்னர் கலியமூர்த்தி மகள் சாந்தி பெயரில் இருந்தது, தற்போது சாந்தி என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற ராமலிங்கம் மகன் ராமசந்திரன் என்பவரின் காலி இடம் உள்ளது. பாலமுருகன் மற்றும் ராமசந்திரன் ஆகியோரின் இடத்திற்கு தென்புறம் யார் இடம் என்றால் தர்மராசு மகன் வசந்தராஜ் காலி இடம் உள்ளது. சாந்தி என்பவரிடமிருந்து ராமசந்திரன் எப்போது கிரையம் பெற்றார் என்றால் 17.03.2025 அன்று வாங்கினார். நான் மேற்கூறிய சாட்சியங்கள் எனது வருவாய் ஆவணத்தின் அடிப்படையில் கூறியுள்ளேன்.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1) நான் எந்த தேதி முதல் ஆத்துக்குறிச்சி கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன் என்றால் ஜுலை 2025 முதல் பணியாற்றி வருகிறேன். நான் நீதிமன்ற அழைப்பாணையை பெற்ற பின்பு அதன் விபரங்களை நான் எனது மேல் அதிகாரியிடம் கூறினேனா என்றால் கூறினேன், யாரிடம் கூறினேன் என்றால் வட்டாட்சியர் அவர்களிடம் கூறினேன். சர்வே எண்349/8 யை எப்போது கள ஆய்வு செய்தேன் என்றால் நேற்றைய தினமான 02.06.2026 அன்று செய்தேன். சர்வே எண்.349/8 என்பது எப்போது உட்பிரிவு ஆனது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், 1985 ஆம் ஆண்டு உட்பிரிவு ஆனது. மேற்படி உட்பிரிவுகள் ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்டதா அல்லது பூர்வீக அடிப்படையில் ஏற்பட்டதா என்ற விபரம் எனது வருவாய் ஆவணங்களில் இருக்கிறதா என்றால் இல்லை. சர்வே எண்.349/8A விற்கு எதனடிப்படையில் ஆறுமுகம் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் என்னிடம் உள்ள வருவாய் ஆவணங்களில் அந்த விபரம் இல்லை. சர்வே எண்.349/8A விற்கு UDR ன் போது யார் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் பெ.ராமலிங்கம் என்பவர் பெயரில் வழங்கப்பட்டது. நான் கள ஆய்வு மேற்கொண்ட போது சர்வேயர் என்னுடன் இல்லை என்றால் சரிதான். சாந்தியிடம் ராமசந்திரன் 17.03.2025 தேதியில் கிரையம் பெற்ற விபரம் எனது வருவாய் ஆவணத்தில் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி தேதி ஆகிய விபரம் நான் எதன் அடிப்படையில் கூறினேன் என்றால் வில்லங்க சான்றின் அடிப்படையில் கூறினேன். சர்வே

எண்.349/8C ல் உள்ள கூட்டுப் பட்டாதாரர்களான 9 நபர்களுக்கு யார் யாருக்கு எந்த இடத்தில் நிலம் உள்ளது என்று குறிப்பிட்டு உள்ளதா என்றால் இல்லை.

ஒப்பம்/செ.பிரபாகரன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.